நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை : திருமதி.எஸ்.முத்துலெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 5 ம் நாள் புதன்கிழமை
குற்றப் பலவகை மனு எண்.1315/2025
IN
பராமரிப்பு வழக்கு எண் .26/2025

1. ஆயிஷா சித்திகா, 26/25,
   க.பெ.முகம்மது ரபீக்

2. மைனர் மு.தைசீரா பாத்திமா, 8/25,

3. மைனர் மு.முகம்மது தைசீர் 7/25

**(2,3 மைனர்களின் தாயாரும் இயற்கை**
**பாதுகாவலருமான 1 ம் மனுதாரர் மூலம்)** ... மனுதாரர்கள்/மனுதாரர்கள்

/எதிர்/

முஹம்மது ரபீக், 42/25,
த.பெ.செய்யது சுலைமான் ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

இம்மனு பரிசீலணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று மனுதாரர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.சாகுல்கமீது அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.அருள்மாணிக்கம் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

**<u>உத்தரவு</u>**

பராமரிப்பு வழக்கு எண்.26/2025 என்ற வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்கள்.

**2. மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் இதில் அபிடவிட்தார் ஆவார், என்றும் எதிர்மனுதார் மனுதாரின் கணவர் ஆவார் என்றும், மனுதாரர் தனது 2,3 மைனர்களுக்காக ஜீவனாம்சம் கேட்டு தனியாக மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், இந்த வழக்கில் மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சம் கேட்டு இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறார் என்றும், எதிர்மனுதார் மனுதாரரை சட்டப்படி பராமரிக்க கடமைப்பட்டவர் என்றும், அவர் எவ்வித சட்ட ரீதியான நியாயமான காரணமுமின்றி மனுதாரரை பராமரிக்காமல் புறகணித்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் உள்ள திருமண உறவு நாளது வரை ஊர்ஜிதத்தில் உள்ளது என்றும், மேற்படி வழக்கை அவர் மேல் நடத்தும் வகைக்கும், மனுதாரருக்கும், 2,3 மைனர்களுக்கு உணவு, உடை, மற்றும் மருத்துவ செலவுகளுக்கும் மாதம் ரூபாய் 25,000/- தேவைப்படுகிறது என்றும், மனுதாரருக்கு எதிர்மனுதாரரிடமிருந்து இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வரும் காலக்கட்டத்தில் இடைக்காலமாக மாதம் ரூபாய் 25,000/- எதிர்மனுதார் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிட வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், எனவே எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதம் ரூபாய் 25,000/-ம் இடைக்கால ஜீவனாம்சமாக வழங்க உத்தரவிட வேண்டிய நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாயிருக்கிறது.

**3. எதிர்மனுதாரர்கள் தரப்பு** :-

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.12.2015ம் வருடம் திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்திற்கு எதிர்மனுதாரர் மஹராக 5 கிராம் தங்க மோதிரம் 1ம் மனுதாரருக்கு வழங்கியுள்ளார் என்றும், மேலும் மனுதாரருக்கு 10 சவரன் மதிப்பிலான வளையல், செயின், கம்மல் உள்ளிட்ட தங்க நகைகளையும் எதிர்மனுதாரர் வழங்கியுள்ளார் என்றும், திருமணத்திற்கு பின்னர் 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவியாக தென்காசியில் உள்ள எதிர்மனுதாரரின் பெற்றோர் வீட்டில் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்றும், மேற்படி திருமணத்தின் பயனாக

1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.09.2016ம் வருடம் தைசீரா பாத்திமா என்ற பெண் குழந்தையும், கடந்த 19.05.2018ம் வருடம் முகம்மது தைசீர் என்ற ஆண் குழந்தையும் பிறந்துள்ளார்கள் என்றும், மேற்படி குழந்தைகளின் பிரசவத்திற்கான செலவுகள் அனைத்தையும் எதிர்மனுதாரர் தான் செய்துள்ளார் என்றும், மேலும் பிரசவத்திற்காக எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் தான் இருந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் 1ம் மனுதாரருக்கு அனைத்து கடமைகளையும் செய்து வந்துள்ளார் என்றும், இம்மனுவின் தன்மை காரணமாக எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களுக்கு 1ம் மனுதாரர் செய்த கொடுமைகள் எதுவும் இம்மனுவில் சொல்லவில்லை என்றும், 1ம் மனுதாரர் மனைவி என்ற முறையில் எதிர்மனுதாரருக்கு செய்ய வேண்டிய எந்தவித பணிவிடைகளையும் செய்யாமல் எப்பொழுதும் செல்போனில் போன் பேசுவதை மட்டும் வழக்கமாக கொண்டிருந்துள்ளார் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரர் செய்த கொடுமைகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு 1ம் மனுதாரர் மனம் மாறிவிடுவார் என்ற நம்பிக்கையின் பேரில் தனது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டு எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் வாழ்ந்து வந்துள்ளார் என்றும், ஆனால் 1ம் மனுதாரர் தொடர்ந்து அவரது பெற்றோர்களின் துர்போதனையின் பேரில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது பெற்றோர்களை மதிக்காமலும், வீட்டில் எவ்வித பணிகளையும் செய்யாமல் இருந்து வந்துள்ளார் என்றும், இதனால் எதிர்மனுதாரர் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளார் என்றும், 1ம் மனுதாரர் தனது பெற்றோரின் துர்போதனையின் பேரில் எவ்வித நியாமான காரணங்களுமின்றி எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து சென்று தனது பெற்றோர் வீட்டில் இருந்துள்ளார் என்றும், எதிர்மனுதாரரும் மனுதாரர் மற்றும் மைனர் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டு 1ம் மனுதாரரை சந்திக்க சென்றுள்ளார் என்றும், ஆனால் 1ம் மனுதாரர் கணவர் என்று கூட பார்க்காமல் எதிர்மனுதாரரை அசிங்கப்படுத்தி அனுப்பியுள்ளார் என்றும், இதனால் எதிர்மனுதாரர் மிகுந்த மன வேதனையில்

இருந்துள்ளார் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் இருந்து கடந்த 04.12.2015ம் ஆண்டு நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து குலா வழங்க நடவடிக்கை எடுக்க கேட்டு மக்கா நகர், முஹயித்தீன் ஜாமிஆ மஸ்ஜித் ஹனிபி ஜமா அத்–திடம் முறையிட்டுள்ளார் என்றும், அதன்பின் கடந்த 04.02.2025ம் தேதியில் தென்காசி மாவட்ட அரசு காழி அவர்களிடம் இருந்து எதிர்மனுதாரருக்கு விளக்கம் கேட்டு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும், மேற்படி அறிவிப்பினை பார்த்து எதிர்மனுதாரர் மிகுந்த மனவேதனை அடைந்துள்ளார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ அனைத்து முயற்சிகளையும் செய்தும் 1ம் மனுதாரர் அரசு காழியிடம் குலா வேண்டும் என்று பிடிவாதமாக இருந்ததால் எதிர்மனுதாரர் வேறு வழியில்லாமல் தனது குழந்தைகளான 2,3 மனுதாரர்களை தன் வசம் வழங்க கோரியுள்ளார் என்றும், அதற்கு சம்மதம் தெரிவித்து தனக்கு குலா மட்டும் போதும் என கூறியதால் கடந்த 24.06.2025ம் வருடம் 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் குல்வுல் முபாராத் எனப்படும் திருமண விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி அறிவிப்பு மற்றும் ஆவணம் என அனைத்தும் 1ம் மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டதாகும் என்றும், 1ம் மனுதாரர் தான் கொண்டு வந்த அனைத்து உடைமைகளையும், பொருட்களையும் எடுத்து சென்றுவிட்டார் என்றும், 1ம் மனுதாரரின் செயலால் எதிர்மனுதாரர் மிகுந்த மன வேதனை அடைந்துள்ளார் என்றும், இந்நிலையில் 1ம் மனுதாரர் மைனர் 2,3 மனுதாரர்களை எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்காமல் இருந்து வந்துள்ளார் என்றும், குழந்தைகளை தன் வசம் ஒப்படைக்க எதிர்மனுதாரர் கேட்டபோது 1ம் மனுதாரர் குழந்தைகளை ஒப்படைக்காமல் இருந்து வந்துள்ளார் என்றும், தொகையை எப்படியாவது எதிர்மனுதாரரிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் 1ம் மனுதாரர் செய்த கொடுமைகளால் எதிர்மனுதாரருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு திருநெல்வேலியில் உள்ள சினேகா மனநல மருத்துவமனையில் மனநல சிகிக்கையிலும், அரசு மருத்துவமனையில்

சைனஸ் மற்றும் உணவு இல்லாமல் அல்சர் நோய் பாதிப்பு ஏற்பட்டு தொடர் சிகிச்சையில் இருந்து வருவதாகவும், மேலும், 1ம் மனுதாரர் செய்த கொடுமைகளால் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு விரட்டியுள்ளதாகவும், தற்போது எதிர்மனுதாரரின் உடல்நிலையின் காரணமாக அவருக்கு எங்கும் வேலை கிடைக்காமல் கடையநல்லூரில் தனது குழந்தைகளுக்காக வாடகை வீட்டில் குடியிருந்து வருவதாகவும், 1ம் மனுதாரர் எவ்வித நியாயமான காரணங்களுமின்றி 2,3 மனுதாரர்களை பணைய பொருளாக வைத்து எதிர்மனுதாரரிடமிருந்து எப்படியாவது பணத்தை அபகரிக்க மட்டுமே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே, மேற்படி மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்வுக்குரிய பிரச்சனை** :–

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1)மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் இடைக்கால ஜீவனாம்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/– வழங்க உத்தரவிடப்பட வேண்டுமா?

மனு, பதிலுரை மற்றும் வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு, இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5. இந்த வழக்கில், 1ம் மனுதார் பாதிக்கப்பட்ட நபர் என்றும், 1ம் மனுதாரர் அவரது பெற்றோர் வீட்டில், அவரது 2,3 மைனர் மனுதார்களுடன் யாதொரு பாதுகாப்பும் இன்றி தனியாக கஷ்ட ஜீவனம் செய்து வருவதாகவும், மனுதாரர்கள் பராமரிப்பு வழக்கு சட்டத்தின்படி நிவாரணம் கேட்டு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அசல் வழக்கில் தீர்ப்பு கூற பல மாதங்கள் ஆகும் என்பதால், இடைப்பட்ட காலங்களில்

மனுதாரர்களுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, மருத்துவ செலவு, 2,3 மைனர் மனுதாரர்களின் படிப்பு செலவு ஆகியவற்றிற்கு மாதம் 1க்கு ரூ.25,000/- தேவைப்படுவதாகவும், மேற்படி வழக்கு முடியும் வரை மனுதாரர்களுக்கு இடைக்கால பராமரிப்பு தொகை கிடைத்தால் தான் மனுதாரர்கள் உயிர்வாழ முடியும் என்றும், 1ம் மனுதாரருக்கு எவ்வித நிரந்தர வருமானமோ, தற்காலிக வருமானமோ கிடையாது என்றும், எதிர்மனுதாரர் ரியல் எஸ்டேட் மூலம் மாதம் ரூ.50,000/- வருமானம் பெறுவதாகவும் மனுதாரரின் அசல் மனுவில் சொல்லப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 04.12.2015ம் வருடம் திருமணம் நடைபெற்றதாகவும், மேற்படி திருமணத்தின் பயனாக 1ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 14.09.2016ம் வருடம் தைசீரா பாத்திமா என்ற பெண் குழந்தையும், கடந்த 19.05.2018ம் வருடம் முகம்மது தைசீர் என்ற ஆண் குழந்தையும் பிறந்துள்ளார்கள் என்றும், மேலும், 1ம் மனுதாரர் மைனர் 2,3 மனுதாரர்களை எதிர்மனுதாரர் வசம் ஒப்படைக்காமல் இருந்து வந்துள்ளார் என்றும், குழந்தைகளை தன் வசம் ஒப்படைக்க எதிர்மனுதாரர் கேட்டபோது 1ம் மனுதாரர் குழந்தைகளை ஒப்படைக்காமல் இருந்து வந்துள்ளார் என்றும், தொகையை எப்படியாவது எதிர்மனுதாரரிடமிருந்து அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் 1ம் மனுதாரர் செய்த கொடுமைகளால் எதிர்மனுதாரருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டு திருநெல்வேலியில் உள்ள சினேகா மனநல மருத்துவமனையில் மனநல சிகிக்கையிலும், அரசு மருத்துவமனையில் சைனஸ் மற்றும் உணவு இல்லாமல் அல்சர் நோய் பாதிப்பு ஏற்பட்டு தொடர் சிகிச்சையில் இருந்து வருவதாகவும், மேலும், 1ம் மனுதாரர் செய்த கொடுமைகளால் எதிர்மனுதாரரின் பெற்றோர்களும் எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு விரட்டியுள்ளதாகவும், தற்போது எதிர்மனுதாரரின் உடல்நிலையின் காரணமாக அவருக்கு எங்கும் வேலை கிடைக்காமல் கடையநல்லூரில் தனது குழந்தைகளுக்காக வாடகை வீட்டில் குடியிருந்து வருவதாகவும் எதிர்மனுதாரர்

தரப்பில் கூறப்பட்டுள்ளது.

7. இந்த வழக்கில், 1ம் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்று, 1ம் மனுதாரர் தனது குழந்தைகளுடன் தற்போது 1ம் எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து உணவு, உடை, மருத்துவ செலவு மற்றும் அன்றாட அத்தியாவசிய செலவுகளுக்கு கூட தனது தேவைகளை பூர்த்தி செய்ய இயலாத சூழ்நிலையில் கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்பது தெளிவாக தெரிகிறது. இந்த மனுவில் பராமரிப்பு வழக்கு சட்டத்தின் கீழ் மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதில் இந்த இடைநிலை மனுவை இடைக்கால ஜீவனாம்ச பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார். 1ம் மனுதாரருக்கு தற்போது எந்த வருமானமும் இல்லை என்பது தெளிவாக தெரிகிறது. எதிர்மனுதார் ரியல் எஸ்டேட் தொழில் செய்வதாக மனுதாரர் தரப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான எந்தவொரு ஆவணத்தையும் மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் வேலை எதுவும் இல்லாமல் வாடகை வீட்டில் இருப்பதாக கூறியுள்ளார். எதிர்மனுதாரர் வாடகை வீட்டில் வேலை இல்லாமல் இருப்பதாக கூறியிருந்தாலும், மனுதாரரை எதிர்மனுதாரரின் மனைவி என்ற முறையிலும், 2,3 மைனர் குழந்தைகளை எதிர்மனுதாரரின் குழந்தைகள் என்ற முறையிலும் எதிர்மனுதாரர் பராமரிக்க சட்டப்படி கடமைப்பட்டுள்ளார்.

8. எனவே, 1,2,3 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் இந்த வழக்கு முடியும் வரை இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்காத பட்சத்தில் 1,2,3 மனுதாரர்களின் மருத்துவம், அன்றாட செலவுகளுக்கும், 2,3 மைனர் குழந்தைகளின் படிப்பு செலவுக்கும் கூட கஷ்டப்படும் சூழ்நிலையில் உள்ளார்கள் என்பது தெளிவாக தெரிகிறது. எனவே, இந்த பராமரிப்பு வழக்கு எண்.26/2025 முடிவு பெறும் வரையிலும் மாதம் ஒன்றுக்கு 1,2,3 மனுதாரர்களுக்கு தலா ரூ.3,000/- இடைக்கால ஜீவனாம்சமாக எதிர்மனுதாரர் வழங்க உத்தரவிட வேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. மேற்கூறிய காரணம், விவாதம், பரிசீலனையின் அடிப்படையில், 1,2,3 மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் பராமரிப்பு வழக்கு எண்.26/2025 என்ற வழக்கில் இடைக்கால ஜீவனாம்சமாக அசல் வழக்கு தாக்கல் செய்த 21.08.2025 முதல் மாதம் ஒன்றுக்கு 1,2,3 மனுதாரர்களுக்கு தலா ரூ.3,000/—த்தை எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இடைக்கால ஜீவனாம்ச தொகையை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 5ம் தேதிக்குள் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. அசல் மனு தாக்கல் செய்த தேதியான 21.08.2025 முதல் இன்று வரை (05.08.2026) உள்ள நிலுவைத் தொகையை இன்றிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 5ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.08.05 15:44:25 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.